DEPOSITION OF WITNESS
IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT & SESSIONS COURT,THENI.
Case No: **SPL.C.No.03/2021**
Prosecution Witness **P.W.14**

| | |
|---|---|
| Name : **திரு.ஆண்டி** | Caste: |
| Father's Name :**திரு.** | Calling : |
| Village: | Religion : |
| Taluk : | Age: |

எதிரிகள் ஆஜர்
**நாள்: 08.04.2026**
(சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டார் )
<u>**முதல் விசாரணை**</u>

1. நான் தற்போது கோம்பை பேரூராட்சி தற்காலிகமாக துப்புரவு பணியாளராக பணிபுரிந்து வருகிறேன். எங்கள் பேரூராட்சியில் உள்ள மேஸ்திரி, எழுத்தர் மற்றும் EO ஆகியோர் சொல்லும் பணிகளை நாங்கள் செய்வோம். உடைந்த பைப்புகளை சரி செய்வதற்கு நான் முன்பு சென்றுள்ளேன், தற்போது அதெல்லாம் செய்வது கிடையாது. உடைந்த பைப்புகளை சரி செய்யும்போது ரூ.200/-, ரூ.300/- என்று பணம் கொடுப்பார்கள். நான் பேரூராட்சியில் கான்ட்ராக்ட் வேலை செய்வதற்கு கொட்டேஷன் எதுவும் கொடுத்ததில்லை.

2. கருப்பையா என்ற காண்ட்ராக்டர் எனக்கு தெரியும், அவர் கோம்பை பேரூராட்சிக்கு வருவார். வேலைக்கு என்னை அழைப்பார் அவ்வளவுதான். அவர் எந்த ஊரை சேர்ந்தவர் அவரது தந்தை பெயர் என்னவென்று எனக்கு தெரியாது. இந்த வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**(அரசு தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க சாட்சியை பிறழ் சாட்சியாக கருதப்பட்டு அவரை குறுக்கு விசாரணை செய்ய அரசு வழக்கறிஞருக்கு அனுமதி வழங்கப்படுகிறது. )**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

1. ஆய்வாளர் என்னை விசாரணை செய்தபொழுது 2012 – 2013–ம் ஆண்டு கான்ட்ராக்ட் வேலை செய்ததற்காக ஒப்பந்த புள்ளி கூறுவதற்கு நான் பதிவு செய்திருந்தேன் என்று சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். அதன்படி குடிநீர் குழாய் உடைப்பு வேலைகளுக்கு பலமுறை ஒப்பந்தம் போட்டிருந்தேன் என்று நான் சொல்லி உள்ளேன் என்றால் சரிதான்.

2. ஆனால் எனக்கு எந்த வேலை உத்தரவும் கிடைக்கவில்லை என்றால் சரிதான். கொட்டேஷன் கொடுத்த சுருளி, பவுன்ராஜ் ஆகியோர்களை பற்றி எனக்கு தெரியாது என்றால் சரிதான். எனக்கு K. கருப்பையா என்பவரையும் தெரியாது என்றால் சரிதான்

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

1. எங்கள் கோம்பை பேரூராட்சியில் கருப்பையா என்ற ஒரே ஒரு நபர் தான் காண்ட்ராக்ட் வேலை பார்த்தார் என்றால் சரிதான்.. அவர் தகப்பனார் பெயர் மற்றும் முகவரி எனக்கு தெரியாது என்றால் சரிதான். அவர் எப்போதும் மது போதையில் தான் இருப்பார் என்றால் சரிதான். அவர் என்னை போல பல நபர்களை நியமித்து கான்ட்ராக்டர் வேலை செய்வார் என்றால் சரிதான். எந்த காலத்திலும் நான் அந்த பஞ்சாயத்தில் பதிவு செய்த காண்ட்ராக்டர் கிடையாது என்றால் சரிதான். அதேபோல் எந்தவிதமான ஒப்பந்த புள்ளியிலும் நான் கலந்து கொள்ளவில்லை என்றால் சரிதான்.

**மறுவிசாரணை – இல்லை**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

SWARNAM J NATARAJAN

Digitally signed by SWARNAM J NATARAJAN
Date: 2026.04.08 15:59:26 +0530

முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி,
தேனி.